# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, கிண்டி,சென்னை–600 032
தொலைபேசி எண்: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி: www.tnlbo.tn.gov.in

முன்னிலை : **திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப.(ஓ).,**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

ஆணை எண். 16/ந/2026, நாள் 08.04.2026

P. அகிலாண்டேஸ்வரி,
பூவிருந்தவல்லி, சென்னை. – முறையீட்டு மனுதாரர்

நகராட்சி ஆணையர்,
பூவிருந்தவல்லி நகராட்சி,
பூவிருந்தவல்லி, சென்னை. – எதிர்மனுதாரர்

சென்னை, பூவிருந்தவல்லி, கரையான்சாவடி, கண்டோன்மெண்ட், விஜயலட்சுமி நகர், பிளாட் எண். 8 A என்கிற முகவரியில் வசிக்கும் திருமதி P. அகிலாண்டேஸ்வரி என்பவரின் **31.12.2025** நாளிட்ட புகார் மனு இம்முறைமன்ற நடுவத்தில் **02.01.2026** அன்று பெறப்பட்டு, **16/ந/2026** என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

சென்னை, பூவிருந்தவல்லி, கரையான்சாவடி, கண்டோன்மெண்ட், விஜயலட்சுமி நகர், பிளாட் நம்பர்.8A என்கிற முகவரியில் வசிக்கும் திருமதி P. அகிலாண்டேஸ்வரி என்பவரின் **31.12.2025** நாளிட்ட முறையீட்டு மனுவுடன் இணைக்கப்பட்டுள்ள **02.01.2026** நாளிட்ட மனுவில் கீழ்க்கண்டவாறு புகார் தெரிவித்துள்ளார்.

"குடியிருப்புகளுக்கு மத்தியில், தொழில் உரிமம் ரத்து செய்யப்பட்ட பின்பும் சட்ட விரோதமாக அனுமதியின்றி இயங்கி வரும் ஸ்ரீ சாய் மாவு மில்லை அகற்றி தருமாறு பல முறை புகார் செய்தும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. மாறாக தொழில் உரிமம் ரத்து செய்த நகலை எங்கள் புகார் மனுவிற்கு பதிலாக வைத்து அனுப்பிவிடுகிறார்கள். நேரில் சென்று கேட்கும்பொழுது SO திரு. கோவிந்தராஜ் என்பவர் முறையற்ற வார்த்தைகளால் திட்டி, எத்தனை முறை புகார் அளித்தாலும் எங்களால் வேறு எதுவும் செய்ய முடியாது என்று ஆணித்தரமாக கூறிவிட்டார். இதனால், எங்களின் எந்த பிரச்சினையும் தீர்க்கப்படவில்லை.

இதனால் நகராட்சி நிர்வாகிகள் சம்பந்தப்பட்ட மில் உரிமையாளரிடம் கையூட்டு பெற்றிருக்கலாம் என்ற ஐயம் எழுகிறது.

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை கடிதம் ந.க.எண்.2078/2025/எச்1, நாள்10.09.2025–ன்படி பூந்தமல்லி காவல் நிலையத்தில் புகார் செய்தும் நாளது தேதி வரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

சம்பந்தப்பட்ட மில் உரிமையாளர் சுப்பிரமணியன் என்பவரிடம் அருகில் குடியிருப்போரும் மற்றும் விஜயலட்சுமி நகர் குடியிருப்போர் நல சங்க நிர்வாகிகளும் நேரில் பார்வையிட்டு கட்டிட அதிர்வு, நெடி, இரைச்சல் இருப்பதால், மில்லை இங்கிருந்து அகற்றுமாறு அறிவுறுத்தினர். ஆனால் அதை சிறிதும் அவர் பொருட்படுத்தவில்லை. அருகில் உள்ள கட்டிடங்களுக்கு கட்டிட அதிர்வு ஏற்படுவதால் அது அருகில் குடியிருப்போருக்கு மிகுந்த ஆபத்தாக உள்ளது.

மேலும் இதன் 12 அடி உயர் விளம்பரப் பலகை ஆபத்தான முறையில் அனுமதியின்றி அமைக்கப்பட்டுள்ளதால் எப்பொழுது வேண்டுமானாலும் அருகில் வசிப்போர்க்கு விபத்து ஏற்பட வாய்ப்புள்ளது. மாவு மில் படிக்கட்டுகள் ரோட்டை ஆக்கிரமித்தும் கட்டி பயன்படுத்தி வருவதால் இங்கு வரும் வாகனங்கள் அனைத்தும் ரோட்டை ஆக்கிரமித்து நிறுத்தப்பட்டு மிகுந்த வாகன போக்குவரத்து இடையூறும், இதனால் அடிக்கடி விபத்துகளும் ஏற்படுகிறது. அனுமதியின்றி சட்ட விரோதமாக செயல்பட்டு வரும் இந்த மாவு மில் பற்றிய செய்தி சக்கர வியூகம் நாளிதழிலும் 16.12.2025 தேதி அன்று வெளியாகி இருந்தது.

இந்த மில்லின் கட்டிட அமைப்பு 4 புறமும் எந்த இடைவெளியும் இன்றி இருப்பதால் இதில் ஏற்படும் அதிக ஒலி, அதிக நெடி, அதிக அதிர்வினால் மிகுந்த சுவாசக் கோளாறு, ஆஸ்துமா, தொடர்சளி, தூக்கமின்மை, தொண்டைப்புண், வயிற்றுப்புண், கண் எரிச்சல், கடுமையான ஒற்றைத் தலைவலி, இருமல் மற்றும் இறைச்சலினால் அதிகப்படியான மன அழுத்தமும், மிகுந்த மன நோயும் (இதன் விளைவாக இரத்த கொதிப்பு, படபடப்பு, மூச்சுத்திணறல், வயிற்றில் அமிலத்தன்மை அதிகரிப்பு, அல்சர், மறதி, முடி உதிர்தல், உடல் சோர்வு) மேலும் பல உடல் உபாதைகளையும் அருகில் குடியிருக்கும் வயதானவர்களும், கர்ப்பிணி பெண்களும் பச்சிளம் குழந்தைகளும் அதிக பாதிப்பை அனுபவித்து வருகிறோம்.

குறிப்பாக பள்ளி மாணவ/ மாணவியர்கள், 10 மற்றும் 12ம் வகுப்பு பொதுத் தேர்வு எழுதும் மாணவர்கள் படிக்க முடியாமல் மிகுந்த பாதிப்பிற்கு உள்ளாகிறார்கள்.

ஆகையால் மாண்புமிகு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் அவர்கள் அருகில் குடியிருப்போரின் உடல் நலத்தை கருத்தில் கொண்டு அனுமதியின்றி சட்டத்திற்கு விரோதமாக செயல்பட்டு வரும் ஸ்ரீ சாய் மாவு மில்லை மேற்கண்ட குடியிருப்புகளுக்கு மத்தியில் இருந்து உடனடியாக நகராட்சி நிர்வாகம் மூலம் அகற்ற ஆவன செய்யுமாறு மிகுந்த தாழ்மையுடன் வேண்டி விரும்பி கேட்டுக்கொள்கிறோம்.

இதில் ஏதேனும் தங்களுக்கு ஐயம் இருப்பின் பாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் எங்களையும் வைத்து, மில்லை தாங்கள் நேரில் ஆய்வு செய்து சட்ட விரோதமாக இயங்கி கொண்டிருக்கும் மில் மீது நடவடிக்கை எடுத்து உடனடியாக குடியிருப்புகளுக்கு மத்தியில் இருந்து மில்லை அகற்றித்தருமாறு மிக தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறோம்." .

2. மனுதாரரின் புகார் மனுமீதான அறிக்கை அனுப்பிவைக்குமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 22.01.2026 நாளிட்ட அறிவிப்பு மூலம் பூவிருந்தவல்லி நகராட்சி ஆணையரை கேட்டுக்கொள்ளப்பட்டது.

3. பூவிருந்தவல்லி நகராட்சி ஆணையரின் கடிதம் ந.க.எண்.195/2026/எச்1, நாள் 24.02.2026–ல் மனுதாரரின் குற்றச்சாட்டுக்களுக்கு கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்.

"மனுதாரரின் மனுவில் குறிப்பிட்டுள்ள சம்மந்தப்பட்ட சாய் மாவுமில் இயங்குவதால் குடியிருப்பு பகுதியில் அதிக ஒலி வருவதால், தொழில் உரிமம் ரத்து செய்ய கோரியதன் அடிப்படையில் குறிப்பிட்டுள்ள இடம் நேராய்வு செய்ததில், சாய் மாவு மில்லிற்கு பூவிருந்தவல்லி நகராட்சி மூலம் வழங்கப்பட்ட தொழில் உரிமம் இரத்து செய்யப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும் சாய் மாவுமில் உரிமைதாரர், தனது வாழ்வாதாரம் வேண்டி தொழில் உரிமம் வழங்க அருகில் உள்ள வீடுகள், கடைகள் மற்றும் நகர் மன்ற உறுப்பினர் ஆகியோரிடமிருந்து சாய் மாவுமில் நடத்த எழுத்து பூர்வமாக கையொப்பம் பெற்று (NOC) இணைத்து மீண்டும் உரிமம் கோரி மனு செய்தும், இந்நகராட்சி மூலம் இது நாள் வரை தொழில் உரிமம் வழங்கப்படவில்லை. புகார்தாரர் மற்றும் சம்மந்தப்பட்ட சாய் மாவுமில்

உரிமைதாரர் ஆகிய இருதரப்பினரையும் நேரில் அழைத்து போச்சுவார்த்தையில் சுமுகமான முடிவு எட்டப்படவில்லை என்ற விவரத்தினை பணிவுடன் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.".

4. மனுதாரர், முதல் எதிர்மனுதாரரான பூவிருந்தவல்லி நகராட்சி ஆணையர், மற்றும் இரண்டாவது எதிர்மனுதாரரான ஸ்ரீ சாய் மாவுமில் உரிமைதாரர் திரு. S. சுப்ரமணியன் ஆகியோரை 10.03.2026 அன்று நடைபெறவுள்ள விசாரணையில் ஆஜராகுமாறு 03.03.2026 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரர் 10.03.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் தனது வாக்குமூலத்தை கீழ்கண்டவாறு பதிவு செய்துள்ளார்.

"மேற்படி முகவரியில் உள்ள எனது சொந்த வீட்டில் குடும்பத்துடன் வசித்து வருகிறேன். மேற்படி பகுதியில் எனது குடியிருப்பை ஒட்டி இயங்கி வரும் ஸ்ரீ சாய் மாவுமில் தடை செய்யப்பட்டுள்ள நிலையில் அனுமதியின்றி செயல்பட்டு வருகிறது. மேற்படி மாவுமில் மூலம் வரும் அதிர்வுகள், சப்தம் மற்றும் மிளகாய், சீக்காய், போன்றவற்றின் பொடிகளாலும், அவற்றின் நெடிகளாலும் அருகில் வசித்து வரும் நாங்கள் நிம்மதியின்றி, பல உடல் உபாதைகளுடன், தொடர் மருத்துவ சிகிச்சையாலும், மிகுந்த மன உளைச்சலோடு வாழ வேண்டிய நிலை உள்ளது. மேற்படி மாவுமில் இயங்கி வரும் கட்டிடம் இடவெளியின்றி விதிமீறி கட்டப்பட்டுள்ளது. காலை 6.00 மணி முதல் இரவு 9.00 வரை அனுமதியின்றி செயல்படுவதால் பள்ளி குழந்தைகளுக்கு கல்வி கற்பிப்பதிலும் மிகுந்த சிரமம் ஏற்படுகிறது. எனவே அனுமதியின்றி செயல்பட்டுவரும் ஸ்ரீ சாய் மாவுமில் மீது நடவடிக்கை மேற்கொண்டு, மேற்படி மாவுமில் இயங்குவதை நிரந்தரமாக தடைசெய்யுமாறும், மேலும் அவர்களால் அனுமதியின்றி ஆபத்து ஏற்படும் வகையில் வைக்கப்பட்டுள்ள விளம்பர பலகையை அகற்றிடவும், சாலையை ஆக்கிரமித்து கட்டியுள்ள படிக்கட்டை அகற்றிடவும் நடவடிக்கை மேற்கொண்டு உதவிடுமாறு மாண்புமிகு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் அவர்களை பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்." .

6. முதல் எதிர்மனுதாரரான பூவிருந்தவல்லி நகராட்சி ஆணையரின் சார்பாக சுகாதார ஆய்வாளராகப் பணியாற்றும் திரு. R.K. கோவிந்தராஜு என்பவர் 10.03.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.

"மனுவில் குறிப்பிட்டுள்ள ஸ்ரீ சாய் மாவு மில் இயங்குவதால் ஏற்படும் அதிக ஒலி மற்றும் சுகாதார சீர்கேடுகளால் தொழில் உரிமம் ரத்து கோரியதன் அடிப்படையில் பூவிருந்தவல்லி நகராட்சி மூலம் வழங்கப்பட்ட தொழில் உரிமம் புதுப்பிக்கவில்லை. மேற்படி இடம் நேராய்வு செய்யப்பட்டதில் குடியிருப்பு மற்றும் உபயோகத்திற்கு தேவையான இடமாக இருப்பதால் விதிகளுக்கு உட்பட்டு 10 HP மின் மோட்டார் பயன்படுத்த அனுமதிக்கப்பட்டுள்ளது. அன்னார் அதற்கு குறைவான HP அளவில் பயன்படுத்தி வருகிறார். மேற்படி மாவு மில் உரிமையாளர் தனது வாழ்வாதாரம் வேண்டி தொழில் உரிமம் மீண்டும் கோரியுள்ளார். அருகிலுள்ள குடியிருப்பு மற்றும் வணிகதாரர்களிடம் இருந்து தடையில்லா சான்று பெற்று அதன் அடிப்படையில் விதிகளுக்குட்பட்டு தொழில் உரிமம் புதுப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் அவர்களுக்கு பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்." .

7. இரண்டாம் எதிர்மனுதாரரான ஸ்ரீ சாய் மாவுமில் உரிமையாளர் திரு. S. சுப்பிரமணியன் என்பவர் 03.03.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் தனது வாக்குமூலத்தை கீழ்கண்டவாறு பதிவு செய்துள்ளார்.

"ஸ்ரீ சாய் மாவுமில் இயங்கி வரும் கட்டிடம் வணிக பயன்பாட்டில் உள்ளது. மனுதாரரால் தெரிவிக்கப்பட்டவாறு மாவுமில்லிலிருந்து அதிர்வுகளோ, நெடிகளோ ஏற்படுவதில்லை. நாள் முழுவதும் மாவுமில் இயங்குவது இல்லை. காலை 10.00 மணி முதல் 1.00 மணிவரை மற்றும் மாலை 3.00 மணி முதல் இரவு 7.30 மணி வரை மட்டுமே மாவுமில் இயக்கப்படுகிறது. இதனால் அப்பகுதியில் வாழ்பவர்களுக்கு எவ்வித பாதிப்புகளும் ஏற்படுவதில்லை. மேலும், மாவுமில் செயல்படுவது குறித்து மனுதாரர் தவிர்த்து பிற பகுதி வாழ் மக்களிடம் இருந்து எவ்வித புகார்களும் இதுவரை பெறவில்லை

என்ற விவரம் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் அவர்களுக்கு பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.".

8) மனுதாரரின் புகார்மனு, வாக்குமூலம், முதல் எதிர்மனுதாரரான பூந்தமல்லி நகராட்சி ஆணையரின் அறிக்கை, பூந்தமல்லி நகராட்சி சுகாதார ஆய்வாளரின் வாக்குமூலம், இரண்டாவது எதிர்மனுதாரரான ஸ்ரீ சாய் மாவுமில் உரிமையாளரின் வாக்குமூலம் மற்றும் தொடர்புடைய ஆவணங்கள் இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது.

தொழில் உரிமம் ரத்து செய்யப்பட்ட ஸ்ரீ சாய் மாவு மில் சட்ட விரோதமாக குடியிருப்புகளுக்கு மத்தியில் இயங்கி வருகிறது என்பதும், மாவுமில் இயங்குவதால் ஏற்படும் அதிர்வுகளால் அருகிலுள்ள கட்டிடங்கள் பாதிப்படைவதாலும், இதிலிருந்து வெளிவரும் இரைச்சல், ஒலி, நெடி போன்றவற்றால் பொதுமக்கள் பல்வேறு நோய்களால் பாதிக்கப்படுவதாலும், குடியிருப்போர் மற்றும் விஜயலட்சுமி நகர் குடியிருப்போர் நல சங்க நிர்வாகிகளால் மேற்படி மாவுமில்லை அகற்றிட அறிவுறுத்தப்பட்டுள்ளது என்பதும், 12 அடி உயரத்திற்கு ஆபத்தான வகையில் அனுமதியின்றி அமைக்கப்பட்டுள்ள ஸ்ரீ சாய் மாவு மில் விளம்பரப் பதாகையினால் விபத்து நேரிட வாய்ப்புள்ளதால், இதனை அகற்றிட வேண்டும் என்பதும், மாவுமில் அமைந்துள்ள கட்டிடம் இடைவெளி விடாமல் படிக்கட்டுகள் ரோட்டை ஆக்கிரமித்து அனுமதியின்றி கட்டப்பட்டுள்ளது என்பதும், குடியிருப்பவர்களின் உடல் நலன், வாகன போக்குவரத்து நெரிசல் கருத்தில் கொண்டு ஸ்ரீ சாய் மாவு மில் மீது நடவடிக்கை மேற்கொள்ள மனுதாரர் இம்முறைமன்ற நடுவத்தை நாடியுள்ளார் என்பதும் மனுதாரரின் புகார் மனு மற்றும் வாக்குமூலத்திலிருந்து அறியமுடிகிறது. மேலும், முதல்வரின் முகவரி மக்கள் குறை தீர்க்கும் மனுவிற்கு பூவிருந்தவல்லி நகராட்சி ஆணையரின் கடிதம் ந.க.எண்.2078/2025/எச்1, நாள் 10.09.2025–ல், 2024–25 ஆம் ஆண்டிற்கு மாவு மில் தொழில் உரிமம் வழங்க விஜயலட்சுமி நகர் குடியிருப்பு பகுதி பொதுமக்களிடமிருந்து தடையின்மைச் சான்று (NOC) பெற்று தொழில் உரிமம் வழங்கப்பட்டுள்ளது என்றும், மனுதாரரின் புகார் மனு தொடர் நடவடிக்கையாக 2025–26 ஆண்டிற்கு தொழில் உரிமம் நிறுத்தப்பட்டுள்ளது என்ற விவரம் மனுதாரருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது என்பது மனுதாரர் சமர்ப்பித்துள்ள ஆவணங்களில் இருந்து அறிய முடிகிறது.

அதிக ஒலி மற்றும் சுகாதார சீர்கேடுகளால் ஸ்ரீ சாய் மாவு மில் தொழில் உரிமம் ரத்து செய்ய வேண்டி பெறப்பட்ட புகார் மனு அடிப்படையில் தொழில் உரிமம் புதுப்பிக்கப்படாமல் உள்ளது என்பதும், ஸ்ரீ சாய் மாவு மில் நேராய்வு செய்யப்பட்டதில் விதிகளுக்கு உட்பட்டு 10 HP மின் மோட்டார் பயன்படுத்த அனுமதிக்கப்பட்டுள்ளது என்பதும், அனுமதிக்கும் குறைவான HP அளவில் மின்சாரம் பயன்படுத்தப்படுகிறது என்பதும், மாவு மில் உரிமையாளரின் வாழ்வாதாரம் வேண்டி தொழில் உரிமத்திற்கான விண்ணப்பம் சமர்ப்பித்துள்ளார் என்பதும், குடியிருப்புவாசிகள் மற்றும் வணிகர்களிடம் இருந்து தடையில்லா சான்று பெற்று விதிகளுக்குட்பட்டு தொழில் உரிமம் புதுபிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதும் முதலாவது எதிர் மனுதாரரான பூவிருந்தவல்லி நகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் பூவிருந்தவல்லி நகராட்சி சுகாதார ஆய்வாளரின் வாக்குமூலத்திலிருந்து அறியமுடிகிறது.

வணிக பயன்பாட்டில் உள்ள கட்டிடத்தில் ஸ்ரீ சாய் மாவுமில் இயங்கி வருகிறது என்பதும், காலை 10.00 மணியிலிருந்து 1.00 மணி வரையிலும், மாலை 3.00 மணியிலிருந்து இரவு 7.30 மணி வரையிலும் மாவுமில் இயங்கி வருகிறது என்பதும், மாவுமில்லிலிருந்து அதிர்வுகள், நெடிகள் ஏற்படுவதில்லை என்பதும், மாவுமில் இயங்குவதால் பகுதியில் வாழ்பவர்களுக்கு எவ்வித பாதிப்புகளும் ஏற்படுவதில்லை என்பதும், மனுதாரர் தவிர்த்து பிற எவரிடமிருந்து புகார்கள் பெறப்படவில்லை என்பதும் இரண்டாவது எதிர்மனுதாரரான ஸ்ரீ சாய் மாவுமில் உரிமையாளரின் வாக்குமூலத்திலிருந்து அறியமுடிகிறது.

இந்நேர்வில், விஜயலட்சுமி நகர் குடியிருப்பு பகுதி பொதுமக்களிடமிருந்து தடையின்மைச் சான்று (NOC) பெற்று 2024–25 ஆம் ஆண்டிற்கான ஸ்ரீ சாய் மாவுமில் தொழில் உரிமம் வழங்கப்பட்டுள்ளதும், 2025–26 ஆம் ஆண்டிற்கான தொழில் உரிமம் நிறுத்தம் செய்யப்பட்டுள்ளது என்ற விவரம் மனுதாரருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளதாலும், 2025–26 ஆண்டிற்கான தொழில் உரிமம் குடியிருப்பு பகுதி பொதுமக்களிடமிருந்தும் மற்றும் வணிகர்களிடம் இருந்தும் தடையில்லா சான்று

பெற்று விதிகளுக்குட்பட்டு தொழில் உரிமம் புதுபிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்ற பூவிருந்தவல்லி நகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் வாக்குமூலத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில், பிரிவு 102–A தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம், 1998–ன்படி பூவிருந்தவல்லி நகராட்சி ஆணையர் நேரடியாக ஸ்ரீ சாய் மாவுமில் இயங்கி வரும் கட்டிடத்தினை கள ஆய்வு செய்து, விதி 289 (6), தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள், 2023–ல் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் பின்பற்றப்பட்டுள்ளதா என்பதை கண்டறிந்து, அதனடிப்படையில் உரிய சட்டபூர்வ நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பூவிருந்தவல்லி நகராட்சி ஆணையரை அறிவுறுத்தி ஆணையிடப்படுகிறது.

2026–ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 08–ம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திருமதி. P. அகிலாண்டேஸ்வரி, க/பெ. A. அண்ணாமலை,
பிளாட் நம்பர்.8 A, விஜயலட்சுமி நகர்,
கண்டோன்மெண்ட், கரையான்சாவடி,
பூவிருந்தவல்லி, சென்னை– 600 056.

2) நகராட்சி ஆணையர்,
பூவிருந்தவல்லி நகராட்சி,
பூவிருந்தவல்லி, சென்னை– 600 056.

3) திரு. S. சுப்ரமணியன்,
உரிமையாளர், ஸ்ரீ சாய் மாவுமில்,
எண். 2/7 A, விஜயலட்சுமி நகர்,
கண்டோன்மெண்ட், கரையான்சாவடி,
பூவிருந்தவல்லி, சென்னை– 600 056.

4) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி.நகர், சென்னை – 600 028.

5) இணை இயக்குநர் / ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி.நகர், சென்னை – 600 028.

நகல்: மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனிச் செயலர்,
இ.கோ/உதிரி.

// ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

செயலாளர்

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
வாய்மையே வெல்லும்
சென்னை–600 032